# காரைநகரில் நேற்றும் அகோர குண்டுத் தாக்குதல்

(யாழ்ப்பாணம்)
காரைநகர் கடற்படை முகாம் பகுதியில் நேற்று மாலை முதல் பொம்மர்கள், அவ்ரோக்கள் பலத்த குண்டு வீச்சுத்தாக்குதலை மேற்கொண்டன.

இதேவேளை 2 ஹெலிகள் கலிபர் தாக்குதலை மேற்கொண்டது. மாலை 6-00 மணி முதல் 3 பொம்பர்களும் 2 அவ்ரோக்களும் பலத்த குண்டு வீச்சு தாக்குதலை

(4-ம் பக்கம் பார்க்க)


விலை ரூபா 4-50

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர்: 33 பங்குனி 20 றமழான் 17 இதழ்: 52

யாழ்ப்பாணம் புதன்கிழமை 03-04-1991


## காவலரணிலிருந்து வெளியேற முயன்ற படையினர் மீது தாக்கு

[யாழ்ப்பாணம்]
காரைநகரிலுள்ள சீ-நோர் காவலரணிலிருந்து வெளியேற முயன்ற இராணுவத்தினர் விடுதலைப்புலிகளினால் விரட்டியடிக்கப்பட்டனர்.

நேற்றுமுன்தினம் மாலை 5 மணியளவில் இக்காவலரணிலிருந்து வெளியேற முயன்ற இராணுவத்தை எதிர்த்து விடுதலைப்புலிகள் பலத்த

(4ம் பக்கம் பார்க்க)

## ஆறு பொதுமக்கள் மட்டுநகரில் சுட்டுக் கொலை

(மட்டக்களப்பு)
மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள வேப்பவெட்டுவானுக்கும் இலுப்பையடிச் சேனைக்கும் இடையில் நேற்று முன்தினம் ஆறு பொதுமக்கள் சிறிலங்கா இராணுவத்தின

(4-ம் பக்கம் பார்க்க)

### வவுனியா, கிளிநொச்சி, மன்னார் பகுதிகளில்

# இராணுவ நடவடிக்கைக்கு அரச படைகள் முயற்சி!

(யாழ்ப்பாணம்)
**வவுனியா, மன்னார், கிளிநொச்சி மாவட்டங்களில் இராணுவ நடவடிக்கைகளை ஆரம்பிக்கும் முயற்சிகளில் ஸ்ரீலங்கா படையினர் ஈடுபடுத்தப்படவுள்ளனர்.**

**இப்பகுதிகளில் ஊரடங்குச் சட்டம் அமுல்படுத்தப்பட்டு இராணுவ நடவடிக்கைகளுக்கான ஆரம்ப முயற்சிகள் நடைபெற்று வருவதாகக் கொழும்பில் இராணுவ அதிகாரி ஒரு ர் கூறினர்.**

மன்னார், வவுனியா ஆகிய நகரங்களில் அமுல்செய்யப்பட்ட ஊரடங்குச் சட்டம் நீக்கப்பட்டு, தற்போது நகர்ப்புறம் தவிர்ந்த ஏனைய இடங்களிலும் ஊரடங்கு அமுலில் இருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது. நேற்று நள்ளிரவு முதல் கிளிநொச்சிப் பகுதியிலும் ஊரடங்குச் சட்டம் அமுல்படுத்தப்பட்டுள்ளது.

இப்பகுதிகளில் பலதடவைகள் இராணுவ நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுப் படு

(4-ம் பக்கம் பார்க்க)

## கிளிநொச்சியில் ஊரடங்குச்சட்டம்

(யாழ்ப்பாணம்)
கிளிநொச்சி மாவட்டத்தில் நேற்று நள்ளிரவு முதல் ஊரடங்குச் சட்டம் அமுல்படுத்

(4-ம் பக்கம் பார்க்க)

## 23 இராணுவ சடலங்களும் கடற்படையிடம் ஒப்படைப்பு

[யாழ்ப்பாணம்]
மன்னார் வேப்பங்குளம் மோதலில் விடுதலைப் புலிகளால் கைப்பற்றப்பட்ட 23 இராணுவத்தினரின் சடலங்களையும் விடுதலைப் புலிகள் நேற்று சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்திடம் ஒப்படைத்தனர்.

நேற்று மாலை 5-30 மணிக்கு செஞ்சிலுவைச் சங்கத்தினர் மேற்படி சடலங்களை மூன்று லொறிகளில் ஏற்றிச்சென்று பருத்தித்துறையில் தரித்து நின்ற 'குமண' கப்பலில் ஒப்படைத்தனர்.

சடலங்களை ஏற்றிக்கொண்டு

(4-ம் பக்கம் மார்க்க)

## பலாலி முகாமிலிருந்து நவீனரக ஷெல் தாக்கு

(பண்டத்தரிப்பு)
காரை நகரை நோக்கி நேற்று முன்தினமிரவு பலாலி முகாமிலிருந்து நவீன ரக புதிய 'ஷெல்'கள் ஆறு ஏவப்பட்டன.

பலாலி முகாமிலிருந்து ஏவப்பட்ட இச்ஷெல்கள் பண்டத்தரிப்பு பகுதியில் வானிலே வெடித்து அதிலிருந்து பிரிந்த ஷெல்கள் காரை நகரை நோக்கி சென்று வீழ்ந்து வெடித்துள்ளன.

ஹெலிகொப்டரும், சீ-பிளேனும் பலமணிநேரம் முகாமை அண்டிய பகுதிகளில் கிரனைட் தாக்குதலை மேற்கொண்டன. ஹெலியிலிருந்து துப்பாக்கி பிரயோகமும் மேற்கொள்ளப்பட்டது.

இதே நேரம் கடலிலிருந்து பலத்த பீரங்கி தாக்குதலும் கடற்கோட்டை, ஊர்காவற்

[4-ம் பக்கம் பார்க்க]

## விமானக் குண்டுவீச்சில் இருவர் பலி; இருவர் காயம்

[வவுனியா]
வவுனியா மாவட்டத்திலுள்ள பூவரசங்குளம் பகுதியில் இரு பொம்மர் விமானங்கள் நடத்திய குண்டுத்தாக்குதலில் இரு பொதுமக்கள் கொல்லப்பட்டதுடன் இருவர் காயமடைந்தனர்.

[4-ம் பக்கம் பார்க்க]

## நாதஸ்வர இசையிலும் புலிகளின் கானங்கள்

(மாங்குளம்)
நாதஸ்வர இசையிலும் விடுதலைப் புலிகளின் புரட்சிக் கானங்கள் ஒலிக்கின்றன.

ஆலய உற்சவங்கள், திருமண வைபவங்கள், கொண்டாட்டங்களின்போது நாதஸ்வர இசையில் புரட்சிக் கானங்களைக் கேட்கமுடிகிறது. (150)

## பொலிஸ்காரர் பலி

(மட்டக்களப்பு)
மட்டக்களப்பு இருதயபுரத்தில், பொலிஸார் மீது விடுதலைப் புலிகள் மேற்கொண்ட திடீர்த் தாக்குதலில் பொலிஸ்காரர் ஒருவர் கொல்லப்பட்டார்.

(4-ம் பக்கம் பார்க்க)

## ஷெல் வீச்சு ஒருவர் காயம்

(யாழ்ப்பாணம்)
ஆனையிறவு முகாமிலிருந்து நேற்று இராணுவத்தினர் இயக்கச்சிப்பகுதியினை நோக்கி ஷெல் தாக்குதலை நடத்தினர்.

[4-ம் பக்கம் பார்க்க]

## புத்தளம் கடற்பகுதியில் எண்ணெய் ஊற்று?

(கொழும்பு)
புத்தளம் கற்பிட்டி கடற்கரைப் பகுதிகயில் மசகு எண்ணை ஊற்று இருப்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

மேற்படி கடல் பகுதியில் மீன்பிடித்தொழிலில் ஈடுபட்டிருந்த கடற்றொழிலாளர்கள், இப்பகுதியின் கரையோரங்களில் கடந்த பல நாட்களாக எண்ணைத்தன்மை காணப்படுவதாக பொலிஸாருக்குத் தெரிவித்ததைத் தொடர்ந்தே இந்த ஊற்றுக் கண்டுபிடிக்கப்பட்டதாம்.

புத்தளம் கற்பிட்டிப் பகுதிக்கு தற்போது எண்ணை வள ஆய்வாளர்களும், சுகாதார அதிகாரிகளும், பத்திரிகை நிருபர்களும் படையெடுத்தவண்ணமிருப்பதாகக் கூறிப்படுகின்றது. (வி)

## 6 கடற்படையினர் படுகாயம்

(கொழும்பு)
காரைநகர் கடற்படையினருக்கும், விடுதலைப் புலிகளுக்குமிடையே நேற்று முன்தினம் இரவு நடைபெற்ற கடும் மோதலில் 6 படையினர் படுகாயம் அடைந்தனர்.

இத்தகவலைக் கடற்படைத் தலைமையகம் நேற்றுக் கொழும்பில் தெரிவித்தது. கடற்படை முகாம் மீது புலிகள் மேற்கொண்ட தாக்குதலின்போதே இவர்கள் படுகாயமடைந்தனராம்,

தற்போதும் இடையிடையே அங்கு மோதல் நடைபெறுவதாகவும் கடற்படைத் தலைமையகம் தெரிவித்துள்ளது. (சி)

## தினமும் பீதியுடன் வாழும் தமிழ் பொதுமக்கள்

(மாங்குளம்)
வவுனியா நகரப்பகுதி மற்றும் அயல் கிராமங்களில் வசிக்கும் தமிழ் மக்கள் தினமும் பீதிநிலையிலேயே பொழுதைக் கழிக்க வேண்டியுள்ளது.

வவுனியாவில் அடிக்கடி ஏற்பட்டு வரும் இராணுவ நடவடிக்கையில் அப்பகுதி மக்கள் வீட்டைவிட்டு வெளியேற முடியாமலும் முக்கிய கருமங்களை ஆற்ற முடியாமலும் அவதிப்பட்டு வருகின்றனர்.

[4-ம் பக்கம் பார்க்க]

## நிவாரணப் பொருள்கள் உணவு களஞ்சியத்தில் தேக்கம்

('மாங்குளம்)
மக்களுக்கு விநியோகிக்கப்படவேண்டிய நிவாரணப் பொருட்கள், வவுனியா உணவுக் களஞ்சியத்தில் தேங்கிக் கிடப்பதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

வவுனியா நகருக்கு வெளியே கூட்டுறவுச் சங்கக் கிளைகளுக்கு எடுத்துச் செல்லப்படவேண்டிய பல லட்சம் ரூபா பெறுமதியான உணவுப் பொருட்களை எடுத்துச் செல்ல வாகன வசதிகள் இல்லாததால் தேங்

(4-ம் பக்கம் பார்க்க)

# வரி விளம்பரம்

## விற்பனைக்கு

புதிய சன்யோ காஸ் குக்கர் சிலிண்டருடன், Sumeet Kitchen Machine, 21'' National கலர் T. V., Akai வீடியோ டெக் விற்பனைக்கு உண்டு: விபரங்களுக்கு; ஹோட்டல் பரடைஸ், 91, கஸ்தூரியார் றோட். யாழ்ப்பாணம். (சி-4530)

## வகுப்பு

கொம்பியூட்டர் Basic, S.L E:A.S., தட்டெழுத்தும் சுருக்கெழுத்தும், I. A. B, வகுப்புகள் 6-4-91ல் ஆரம்பமாகின்றன. School of Business Administration, 16, 3வது குறுக்கு வீதி, யாழ்ப்பாணம். (சி-4605)

## புலமைப்பரிசில் பரீட்சை

ஆண்டு 5 புலமைப்பரிசில் பரீட்சை மாதிரி வகுப்புகள் ஆரம்பமாகியுள்ளன. தூர இடமாணவர்களுக்கு சனி, ஞாயிறு வகுப்புகள் 30-03-91ல் ஆரம்பமாகியுளளன. 30ம் திகதி நடைபெற்ற புலமைப் பரிசில் பரீட்சை வினுத்தாள்கள் விற்பனைக்குண்டு. புதிய கல்வி நிலையம், 219, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (சி-4604)

## "இருள் இரவில் அல்ல"

மீரா வெளியீடு ''எந்த ஒரு ஆணும் வயதான காலத்தில் மனைவியை இழக்கக்கூடாது, எந்த ஒரு பெண்ணும் இளம் வயதில் கணவனை இழக்கக் கூடாது இழந்தால்? (சி 4606)

## ஸ்வீட் மேக்கர்

யாழ்ப்பாணத்திலுள்ள ரவர் கோப்பி பார் நிறுவனத்திற்கு மட்டன் றோல், கட்லட், போண்டா உட்பட ஸ்வீட் தயாரிப்பதற்கு ''கோக்கி'' ஒருவர் தேவை. நேரில் வரவும். ரவர் கோப்பி பார் மணிக்கூட்டு கோபுர வீதி. யாழ்ப்பாணம்- (சி-4526)

## பாலாஜி புத்தகசாலை

உங்கள் பெறுமதி மிக்க புத்தங்கள் கொப்பிகள் அனைத்தும் மிக அழகான முறையில், (பையின்டிங்) கட்டிக்கொடுக்கப்படும், இவை நூலகங்கள் மற்றும் கல்லூரி புத்தகங்களுக்கு குறைந்த சலுகை வழங்கப்படும். 10/6, முதலாம். ஒழுங்கை, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். (சி-4520)

## வியாபாரம் பெருக விளம்பரம் செய்க


மிக்க சக்திகொண்ட அடிக்கட்டு உரமாகவும், பூச்சி கொல்லியாகவும் பயனளிப்பது

"நீமியா உரம்"


இணுவில், திருநெல்வேலி, யாழ்நகர் அண்ணா கோப்பிக்கடைகளிலும் விற்பனையாகிறது.

மில்க்வைற் - யாழ்ப்பாணம்.

( ஏ1203)


உ
சிவமயம்

# அந்தியேட்டி-வீட்டுக்கிரியை அழைப்பு



தோற்றம்: 921 - 07 - 27

மறைவு: 1991 - 03 - 06

## அமரர் நாகலிங்கம் நடராசா

(இளைப்பாறிய அதிபர், புங்குடுதீவு)

காலம்: 1991-04-03 (இன்று) புதன்கிழமை காலை 6-00 மணி அந்தியேட்டி. கண்ணகை அம்மன் கோவில் மடம் 1991-04-05 வெள்ளிக்கிழமை நண்பகல் 12-00 மணி வீட்டுக்கிரியை — இல்லம்,

மேற்படி நிகழ்ச்சிகளில் கலந்து அன்னாரின் ஆத்ம சாந்திக்குப் பிரார்த்தித்து மதியபோசனத்திலும் கலந்து கொள்ளும்படி அன்புடன் அழைக்கிறோம்.

நன்றி

''சிவபதி''
புங்குடுதீவு - 3

இங்ஙனம்
மனைவி, மக்கள், மருமக்கள்.

(சி 4602)


# தொழிற் பயிற்சிகள்

உள்நாட்டிலும், வெளிநாடுகளிலும் இலகுவான முறையில் தொழில்வாய்ப்புப் பெறக்கூடிய முறையில் பயிற்சியளிக்கப்படும்

★ AIR CONDITIONING AND REFRIGIRATION (THEORY & PRACTICALS)
யாழ். நகரில் உள்ள Auto Cool Engineers ஸ்தாபனத்தில் பயிற்சியளிக்கப்படும்.

காலம்: 4 மாதம்

★ ரெலிவிஷன், வீடியோ டெக் றிப்பியறிங் சகல இன றேடியோ, ரெலிவிஷன், வீடியோ டெக் தொழிற்படும் முறை, திருத்தப்படும்முறை ஆரம்பத்திலிருந்து பயிற்சியளிக்கப்படும்.

காலம்: 4 மாதம்

பயிற்சிகள் ஆரம்பம்: 05-04-91
[கிழமை நாட்கள்]

06-04-91 (சனி, ஞாயிறு)

விபரங்களிற்கு:

JAFFNA TECHNICAL INSTITUTE

ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்

(றெயில்வே கடவை அருகாமை)

(ஏ-1168)


வெ/செட்டிகுளம் ப. நோ. கூ. சங்கம்

# பொது முகாமையாளர் பதவிக்கான விண்ணப்பம்

கீழ்க்காணப்படும் தகுதியுடைய இலங்கைப் பிரசைகளிடம் இருந்து மேற்படி பதவிக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. 1991-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 21-ம் திகதிக்கு முன்னர் விண்ணப்பங்கள், தலைவர் வெ/செட்டிகுளம் ப. நோ. கூ. சங்கம் குருக்கள் புதுக்குளம் என்னும் விலாசத்திற்கு பதிவுத்தபால் மூலமோ அல்லது நேரிலோ, அனுப்பப்படல் வேண்டும்.

(1) விண்ணப்பத்தாரியின் முழுப்பெயர் ;
(2) பிறந்த திகதி;
(3) நிரந்தர விலாசம்:
(4) கல்வித்தகைமைகள் :
(5) தற்போது வதியும் மாவட்டம்:
(6) மாவட்டத்தில் வசித்த காலம் ;
(7) அண்மையில் பெறப்பட்ட இரண்டு சான்றிதழ்கள்
(அவ்வப்பகுதி கி. சே. அலுவலரின் சான்றிதழ் இணைக்கப்படவேண்டும்.)

**கல்வித்தகைமைகள் :**

கூட்டுறவுப்பணியாளர் 7வது சம்பளத்திட்டத்தில் முகாமை அல்லது மேற்பார்வைத்தரத்தில் மூன்று வருடங்கள் கடமையாற்றிய அனுபவம் அல்லது கூட்டுறவுப்பணியாளர் எட்டாவது சம்பளத்திட்டத்தில் முகாமை / மேற்பர்வைத்தரத்தில் ஆறு வருடங்கள் கடமையாற்றய அனுபவம்.

அல்லது

அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தில் பெறப்பட்ட பட்டம் அல்லது சமமான தகுதிகளுடன் நான்கு வருடங்களுக்குக் குறையாத முகாமைத்துவ அனுபவம் (அங்கீகரிரகப்பட்ட வர்த்தக நிறுவனத்தில் / கைத்தொழில் நிறுவனத்தில்) பெற்றிருத்தல் வேண்டும்.

அல்லது

கூட்டுறவுப் பணியாளர் (உ/தரம்) தராதரப் பத்திரம் அல்லது க. பொ. த. (உ/தரம்) உயர்தரத்தில் மூன்று பாடங்கள் சித்தி அடைந்திருப்பதோடு அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக நிறுவனம் / கைத்தொழில் நிறுவனம் ஒன்றில் ஆறு வருடங்களுக்குக் குறையாத முகாமைத்துவ அனுபவம் பெற்றிருத்தல் வேண்டும்.

சம்பள அளவுத் திட்டம்:-

$$\frac{1305 - 2370}{60x4 - 75x11}$$ மற்றும் படிகளும்

1991 ஏப்பிரல் 21-ம் திகதி 40 வயதுக்கு மேற்படாத விண்ணப்பதாரிகளிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன,

வவுனியா மாவட்டத்தில் வதிபவர்களுக்கும் தற்பொழுது கூட்டுறவுச் சங்கங்களில் பணிபுரிபவர்களுக்கும் முன்னுரிமை வழங்கப்படும்.

எல். சீ. லெய்பேட்,
தலைவர்,
பல நோ. கூ. சங்கம்,
செட்டிகுளம் குருக்கள் புதுக்குளம்:

(ஏ-1201)

# முத்தமிழ்விழா நிகழ்ச்சிகள்

(புங்குடுதீவு)

புங்குடுதீவுப் பகுதியில் எதிர் வரும் 8ம், 9ம் திகதிகளில் முத்தமிழ்விழா நடைபெற இருக்கிறது. இதற்கான சகல ஏற்பாடுகளும் தற்போது மிக சிறப்பாக நடைபெற்று வருகிறது.

முத்தமிழ் விழாவிற்கான புதிய அரங்கு ஒன்றும் புங்குடுதீவு முற்றவெளி மைதானத்தில் அமைக்கப்பட்டு வேலைகள் துரித கெதியில் நடைபெற்று வருகினறன.

இவ்விழாவில் தமிழீழ விடுதலைப் புலிகளின் மக்கள் முன்னணியின் பிரமுகர்கள் கலந்து கொள்ளவிருக்கின்றுர்கள்.

## மாணவி தற்கொலை

(பருத்தித்துறை)

வாழ்க்கையில் விரக்தியுற்ற மாணவியொருவர் கிருமி நாசினி அருந்தித் தனது வாழ்வை முடித்துக்கொண்டார்.

புலோலி கிழக்கு புற்றளையைச் சேர்ந்த உயர் வகுப்பு மாணவியான மலர்விழி சின்னத்துரை (வயது 20) என்பவரே வாழ்க்கையில் விரக்தியுற்றமையால் நஞ்சிடம் தஞ்சம் புகுந்தவராவார். (52)

## ராஜினமா

(பருத்தித்துறை)

பருத்தித்துறை அரசினர் வைத்தியசாலையில் உள்ள ஊழியர்கள் நலன்புரிச் சங்கச் செயற்குழு உறுப்பினரான டாக்டரொருவர் ராஜினமாச் செய்துள்ளார்.

டாக்டர் எஸ். லோகேஸ்வரதேவனே ராஜினமாச் செய்த டாக்டராவர்.

ஊழியர்கள் நலன் புரிச் சங்க நடவடிக்கைகளில் இவர் அதிருப்தியடைந்தமையினுலேயே தான் ராஜினமாச் செய்ததாக தெரிவித்தார். (52)

# இராசி பலன்

03-04-1991
புதன்கிழமை

சதுர்த்தி பி. ப. 4-21 வரை விசாகம் மு. ப. 8-04 வரை, சித்தாமிர்தயோகம், இராகு காலம் பகல் 12-10முதல் 1-40 வரை. சுபநேரம் மாலை 4-40 முதல் 6-10 வரை.

மேடம்: கண்ணில்ரோகம், உடல் சோர்வு' வேலைப்பளு.

இடபம்: சுபகாரிய நிகழ்வு, பணியாள் சகாயம், உபசரணை.

மிதுனம்: தொழில் முயற்சி, மனைவியால் நன்மை, குடும்பச் சுகம்.

கடகம்: தற்பெருமை, அநாவசிய தொல்லை, குடும்பச்சச் சரவு.

சிங்கம்: மனைவியால் துன்பம், வாக்குப் பலிதம், தொழில் பாதிப்பு.

கன்னி: மறைமுக நட்பு, கடன் சுமை, வைராக்கியம்.

துலாம்: தொழில் கஷ்டம், சொத்து தகராறு, அலைச்சல் மிகுதி.

விருச்சிகம்: ஆடம்பரச் செலவு, புத்திரர் மகிழ்ச்சி, உல்லாசப் பயணம்.

தனுசு: தொழில் லாபம், பணத்தகராறு, குடும்ப மனஸ்தாபம்

(4-ம் பக்கம் பார்க்க)

## மலிவாகக் கொள்வனவு செய்த பொருள்களின் விலைகளையும் ப.நோ.கூ.ச. கூட்டுகிறார்கள்

(வேலணை)

யாழ். குடாநாட்டிலுள்ள பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களால் நடாத்தப்படும் சங்கத்தின் கிளைகளில் தனியார் விற்பனை நிலையங்களிலும் பார்க்கப் பொருட்களின் விலைகள் கூடுதலாகவுள்ளன.

இதற்கு அவர்களிடம் காரணம் கேட்டால் தாங்கள் முன்னர் கூடிய விலைக்கு இப்பொருட்களைக் கொள்முதல் செய்ததாலேயே இந்த விலை மாற்றம்என்று கூறுகின்றார்கள்.

ஆனால் அரசாங்கம் திடீரெனப் பொருட்களின் விலைகளைக் கூட்டினால் எதுவித தாமதமுமின்றி முன்னர் மலிவாகக் கொள்முதல் செய்த பொருட்களாயினும் சரி உடனடியாக ப.நோ.கூ. சங்கத்தினர் அந்தப் பொருட்களுக்கும் விலையை ஏற்றிவிடுகின்றார்கள்.

பொருட்களின் விலை ஏறும் போது உடனடியாக விலைகளை ஏற்றுவோர் விலை குறையும் போது பொருகளின் விலைகளையும் குறைத்தால் என்ன என்று மக்கள் கேட்கின்றனர். (75)

## புலோலி ப. நோ. கூ. ச. பாணுக்கு பதிலாக பிஸ்கட் தயாரிப்பு!

(பருத்தித்துறை)

புலோலி ப. நோ. கூ. சங்கமும் பாண் உற்பத்தியிலீடுபட்டு பாவனையாளர்களின் பாண்தேவைகளைப் பூர்த்தியாக்க வேண்டுமென பாவனையாளர்கள் புலோலி ப. நோ. கூ. சங்க நிர்வாகத்திற்குக் கோரிக்கை விடுத்துள்ளனர்.

புலோலி ப. நோ. கூ. சங்கத்திற்கு பேக்கரிஇருந்தும் பாணை தாயாரிக்காமல் இருக்கின்றது. சங்கத்திற்கு அதிக இலாபம் தரும் பிஸ்கற் தயாரிப்பில் மாத்திரம் இச்சங்கம் ஈடுபட்டு வருகின்றது.

இதனால் இப்பகுதி பாவனையாளர்கள் பாதிப்படைந்துள்ளனர். எனவே புலோலி ப. நோ. கூ. சங்கமும், பாவனையாளர்களின் சேவையைக் கருத்திற்கொண்டு பாணை உற்பத்திசெய்து வழங்க நடவடிக்கை எடுக்கவேண்டும் என கேட்கப்பட்டுள்ளது. (52)

## கிளிநொச்சியில் பால்சேகரிப்பு நிலையங்கள்

(மாங்குளம்)

கிளிநொச்சி மாவட்டத்தில் கிராமப் பகுதிகளில் பால் சேகரிப்பு நிலையங்கள் ஆரம்பிக்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

கிராமப்புற மக்களுக்கிடையே பால் சேகரிப்பினை விருத்தி செய்யவும் பொருளாதார நிலையை உயர்த்தவும் இத்திட்டம் மேற்கொள்ளப்பட்டுவருகிறது.

கிராமங்களில் இதற்கென சில அங்கத்தவர்களைத் தெரிவு செய்து கால்நடை வைத்தியப் பயிற்சி அளித்து சித்தியடைந்தவர்களுக்கு சான்றிதழும் வழங்கப்படவுள்ளது. (150)

## அரச அதிபருக்கு புதிய பதவி

[யாழ்ப்பாணம்]

யாழ். அரசஅதிபர் திரு. அன்ரன் அல்பிரட் வெகுவிரைவில் கொழும்பிலுள்ள துறைமுக கப்பல்துறை இணை அமைச்சரின் நிரந்தர செயலாளர் பதவிக்கு நியமனம் பெறவிருப்பதாக அறிய வருகிறது. (மா)

## மாதாந்த உதவிப் பணம்

(பூநகரி)

பூநகரி அஞ்சல் அலுவலகத்திலும் அதன் கட்டுப்பாட்டில் உள்ள உப அஞ்சல் அலுவலகங்களிலும் இனிமேல் பொதுசன மாதாந்த உதவிப்பணம் வழங்கப்படும் என்று பூநகரி அஞ்சல் அதிபர் தெரிவித்தார். (23)

## வவுனியாவில் தேங்கிக் கிடக்கும் தமிழ் பாட நூல்கள்

[கொழும்பு]

வவுனியாவிலுள்ள தமிழ்ப் பாடசாலைகளுக்கென ஒதுக்கப்பட்ட பாடசாலைப் புத்தகங்கள் நகர்ப்பகுதியிலுள்ள சைவப்பிரகாச வித்தியாசாலையில் தேங்கிக்கிடக்கின்றன.

வவுனியா நகருக்கு பாடப் புத்தகங்களை எடுத்துச் செல்வதற்கு இராணுவத்தினர் தடைவிதித்திருந்தமையாலேயே இப் பாடப்புத்தகங்கள் தேங்கிக் கிடப்பதாக தெரியவருகிறது.

பல நாட்களாக இப்பாடப் புத்தகங்கள் தேங்கிக் கிடப்பதால் சேதமடைந்து அழிந்துவிடும் நிலையிலிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

மேற்படி பாடசாலைப் புத்தகங்களை தற்போது சிறுவர் பாதுகாப்பு நிலையம் பொறுப்பேற்று மாணவர்களுக்கு வழங்குவதற்கு முன்வந்துள்ளது. (க-வி)

## 5ம் ஆண்டு புலமைப்பரீட்சை விடைத்தாள்கள் இன்று அனுப்பப்படும்

(யாழ்ப்பாணம்)

நெடுந்தீவு, நயினாதீவு, எழுவைதீவு போன்ற இடங்களிலிருந்து பாடசாலை மாணவர்களின் 5-ம் ஆண்டுவிசேட புலமைப் பரிசில் பரீட்சை விடைத்தாள்கள் இன்னமும் யாழ். கல்விக் கந்தோருக்கு வராமையால் அவை கொழும்புக்கு அனுப்பி வைக்கப்படவில்லை.

இவ்வாறு யாழ். கல்விப் பணிப்பாளர் இ. சுந்தரலிங்கம் நேற்றுத் தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியதாவது: ''தீவுப்பகுதிதவிர்ந்த மற்ற எல்லாப் பாடசாலைகளதும் விடைத்தாள்களை சேர்த்து வைத்திருக்கிறோம். மேற்சொன்ன 3இடங்களிலிருந்தும் விடைத்தாள்கள் வந்து சேர்ந்ததும் அநேமாக அவை இன்று புதன்கிழமை செஞ்சிலுவைச்சங்க மூலம் கொழும்புக்கு அனுப்பிவைக்கப்படும்'' என்றார். (152)

### இராசி பலன்

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

மகரம்: கல்வியால் உயர்ச்சி, பொதுப்பணி பாராட்டு, கடித நன்மை.

கும்பம்: வியாக்கியானம், வீண்வம்பு, அகால போஜனம்.

மீனம்: குடும்பத்தில் சந்தேகம், பணவரவு, அந்நிய வாசம், பகை.

— ஜோஸ்யர்

## போலி விசாவுடன் — லண்டன் செல்ல முற்பட்ட இளைஞர், யுவதி கைது

(கொழும்பு)

போலி விஸாவுடன் லண்டன் செல்ல முற்பட்ட மூன்று இளைஞர்களும் ஒரு யுவதியும் கட்டுநாயக்கா விமான நிலையத்தில் ரகசியப் பொலிஸாரிடம் சிக்கினர்.

கடந்த சனிக்கிழமை இரவு மேற்படி நால்வரும் ''ஏயர் லங்கா'' விமானத்தில் லண்டன் செல்ல முற்பட்டபோது இவர்களின் விஸாக்கள் போலியானது என்பது கடைசி நேரத்தில் கண்டுபிடிக்கப்பட்டதினால் இந் நால்வரும் இரகசியப் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டனர். [வி]

## வகுப்பறைகளில் அகதிகள்: மாணவர்களுக்கு மரநிழலில் கல்வி

[யாழ்ப்பாணம்]

''அகதிகள் பெரும்பாலான வகுப்பறைகளில் தங்கியிருப்பதால் மாணவர்கள் வெளியிலிருந்து கல்விகற்கவேண்டிய நிலை தற்போது ஏற்பட்டுள்ளது''.

இவ்வாறு புத்தூர் சோமஸ்கந்தா கல்லூரி கொத்தணி அதிபர் தெரிவித்தார்.

மேற்படிகல்லூரியில் பலாலி அகதிகள் புனர்வாழ்வுக்கழகம் நடாத்திய கூட்டத்தில் அதிபர் மேலும் கூறியதாவது,

எமது கல்லூரியில் 2500 மாணவர்கள் கல்வி கற்கின்றார்கள். 57 வகுப்பறைகளைக் கொண்ட இக்கல்லூரியில் 30-க்கு மேற்பட்ட வகுப்பறைகளில் பலாலிப் பகுதிகளிலிருந்து இடம்பெயர்ந்த அகதிகள் இருக்கின்றார்கள். இதனால் கூடுதலான மாணவர்கள் மரநிழல்களிலும் பாடசாலை விருந்தைகளிலுமே தமது கல்வியை கற்கிறார்கள்.

இவ் அகதிகளுக்கு வேறு ஒரு இடத்தில் இடவசதி ஏற்படுத்திக்கொடுத்தபோதிலும் அந்த இடத்துக்கு அவர்கள் செல்வதற்கு மறுப்பு தெரிவித்து விட்டார்கள் என்றும் அவர் கூறினார்.

திரு. சீ. சி. கந்தையா தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில், பலாலியில் இருந்து இடம்பெயர்ந்த 3,500 குடும்பங்களுக்கு நிரந்தர நிவாரணங்களும், குழந்தைகளுக்கான உணவு முத்திரைகளும் கிடைப்பதற்கு ஆவனசெய்யப்படவேண்டும் எனறும் வலியுறுத்தப்பட்டது. (வி)

### நூல் ஆய்வு

பிரசோபத்தி வருஷ
வாக்கிய பஞ்சாங்கம்
கணிப்பு:
இ. சி இரகுநாதையரின்
சகோதரரின் புத்திரர்
இ. வெங்கடேச ஐயர்
134-ம் வருஷ பதிப்பு
பக்கங்கள் 124
விலை ரூபா 50.00

மரபுவழிப் பஞ்சாங்கங்கள் அனைத்தும் சூரியசஞ்சாரத்தையொட்டியே கணிக்கப்படுகின்றன. சித்தார்த்தரின் அடிப்படையில் பண்டைநாட் கருத்துக்களை எம்மாற்றமுமின்றி வெளியிட்டு வருவது வாக்கிய பஞ்சாங்கம்.

இந்தவகையில் இவ்வாண்டும் வழமைபோல் பஞ்சாங்க விளக்கம் இராசிப்பரிமானம், அஷாம்சம், ஆரூடசக்கரம், வீட்டு நிலம் எடுத்தல், இராசிப்பரமாணம், விவாகப் பொருத்தம் உட்பட பல ஜோதிட விடயங்கள் சேர்க்கப்பட்டுள்ளனமற்றைய பஞ்சாங்கங்களைவிட வாக்கியபஞ்சாங்கம், பலரும் விரும்பிவாங்குவதற்கு இலகுநடையில் கணிக்கப்பட்டுள்ளது.

- ஸ்ச்சி.

## எழுத்தாளர்களுக்கு ஊதியம் வழங்கப்படும்

(யாழ்ப்பாணம்)

''தமிழ்த் தாய்ப் பதிப்பகத்தால் வெளியிடப்படும் நூல்களை எழுதும் எழுத்தாளர்களுக்கு ஊதியம் வழங்கப்படும்'' என்று விடுதலைப்புலிகளின் மக்கள் முன்னணியின் வெளியீட்டுப் பிரிவுப் பொறுப்பாளர் ரவி செங்கையாழியானின் 'குவேனி' என்ற நூல் வெளியீட்டு விழாவில் உரையாற்றும்போது தெரிவித்தார்.

அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது; எழுத்தாளர்களிடமிருந்து படைப்புக்கள் வரவேற்கப்படுகின்றன. குவேனி தமிழ்த்தாய் பதிப்பகத்தால் வெளியிடப்பட்ட இந்த நூலில் கருத்து முரண்பாடுகள் குறைவாக இருந்தாலும், இன்றைய காலத்துக்கு புதிய கருத்துக்களை சொல்வனவாக இந்நூல் அமைந்துள்ளது'' என்றார். (152)

## வீடமைப்புக் கடன் வழங்க ஏற்பாடு

(மானிப்பாய்)

பதினைந்து லட்சம் வீடமைப்புத் திட்டத்தின் கீழ் சண்டிலிப்பாய் உதவி அரசாங்க அதிபர் பிரிவில் மாதாந்தம் 701 ரூபாவிலிருந்து 2400/- வரை வருமானம் பெறுபவர்களுக்கு கடன் வழங்கும் திட்டமொன்று மேற்கொள்ளப்பட்டுவருகின்றது.

இத்திட்டத்தின் கீழ் வீடு திருத்தவும் புதிய வீடு அமைக்கவும் ரூபா 10 000 மும், புதிய வீட்டுடன் கழிவறையும் சேர்த்துக் கட்ட ரூபா 12, 500ம் வீடு, திருத்தவும் கழிவறை அமைக்கவும் ரூபா 7, 500ம், வீடு திருத்த மட்டும் ரூபா 5000, மலசல கூட்டம் அமைக்க ரூபா 3000ம், மின் இணைப்பு செய்ய ரூபா 5,000ம் புதிய கிணறு அமைக்க ரூபா 5,000ம் என்ற அடிப்படையில் கடன் வழங்கப்படவுள்ளது.

## பலதும் பத்தும்

### கண்ணகி வழிபாடு!

ஈழத்தின் பலபாகங்களிலும் கண்ணகி அம்மனுக்கு கோயில்களுண்டு. ஆனால் தென் தமிழீழத்தில் கண்ணகி விழா வைகாசி மாதத்தில் சிறப்பாக நடைபெற்றுவருகின்றது. இவ்வழிபாடு சிங்கள மக்களிடையே ''பத்தினி தெய்யோ'' வழிபாடாக நடைபெறுகிறது.

கண்டியிலுள்ள தலதா மாளிகையில் கண்ணகிக்கு கோயில் உண்டு இக்கோயிலிலுள்ள கண்ணகி உருவம் கஜபாகு மன்னனால் சேர நாட்டில்சந்தனக்கட்டையில் செதுக்கப்பட்டு எடுத்துவரப்பட்டதாகும்.

கண்டிமாநகர் ஈழத்துக் கடைசித் தமிழ் மன்னன் தலைநகர் மட்டுமன்றி, கண்ணகி வழிபாட்டின் உறைவிடமுமாகும்.

கஜபாகு மன்னனே ஆடி மாதத்து பூரணைத் தினத்தன்று பெரஹரா என்ற பெயரில் கண்ணகிக்கு விழா எடுத்தான். ''பெரஹரா'' என்பதன் தமிழ்ச் சொல் ஊர்வலமாகும். பின்னர் நாகதெய்யோ (சிவன்), விட்டுணு தெய்யோ, கதிர்காம தெய்யோ என்பன இவ்விழாவில் கலந்தன. சீன பிக்குவின் வேண்டுகோள்படி இவ்வழிபாட்டில் புத்தர் பல்லையும் எடுத்து வருகின்றனர்.

— ஞானி

# வளைகுடா யுத்தம்: ஆசிய விமான நிறுவனங்களுக்கு 200 கோடி டாலர் நஷ்டம்

(கொழும்பு)
வளைகுடா யுத்தம் நடைபெற்றதைத் தொடர்ந்து, ஆசிய நாட்டு விமானக் கம்பெனிகளுக்கு 200கோடி அமெரிக்க டொலர் நஷ்டம் ஏற்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

மத்திய கிழக்கில் யுத்தம் தொடங்கி முடிவடையும்வரையிலான இடைப்பட்ட காலப் பகுதியில், ஆசிய நாட்டு விமானக் கம்பெனிகளின் விமானங்களுக்கு எண்ணை நிரப்புவதிலும், பிரயாண அட்டவணைகளிலும் ஏற்பட்ட இடையூறுகளினாலும் 200 கோடி டொலர் நஷ்டம் ஏற்பட்டுள்ளதாக ஜப்பானிலிருந்து வெளியான செய்தி ஒன்று தெரிவிக்கின்றது. (வி)

## பின்போடப்பட்டது

(யாழ்ப்பாணம்]
வட இலங்கை சங்கீத சபையால் இம்மாதம் 5-ம் திகதி நடத்தப்படவிருந்த பரீட்சை, கருத்தரங்கு 1990 இல் 6-ம் தரத்தில் சித்தியடைந்தவர்களுக்கான சான்றிதழ் வழங்கும் வைபவம் ஆகியன தவிர்க்க முடியாத காரணத்தால் பின்போடப்பட்டுள்ளது.

மேற்படி கருத்தரங்கு யாழ். இந்து மகளிர் கல்லூரியில் நடைபெற ஏற்பாடு செய்யப்பட்டது குறிப்பிடத்தக்கது. (க)

## 100 பாடசாலை கட்டிடங்கள் திருத்தியமைக்கப்படும்

(யாழ்ப்பாணம்)
யாழ். மாவட்டத்தில் குண்டுத் தாக்குதலினால் சேதமடைந்துள்ள பாடசாலைகளின் கட்டிடங்களில் பத்து பாடசாலைக் கட்டிடங்கள் விரைவில் திருத்தியமைக்கப்படவிருக்கின்றன.

வல்வெட்டித்துறை சிவகுரு வித்தியாசாலை, யாழ் சென். ஜேம்ஸ் மகாவித்தியாலயம், அல்லைப்பிட்டி பராசக்தி வித்தியாசாலை, அல்லைப்பிட்டி றோ. க, பாடசாலை, மண்கும்பான் பாடசாலை, வேலணை மத்திய மகாவித்தியாலயம், சுருவில் றோ. க. பாடசாலை, அளவெட்டி ஞானோதய வித்தியாலயம், நாரந்தனை றோ. க. பாடசாலை, சின்னமடு பாடசாலை ஆகிய கட்டிடங்களை உடனடியாகத் திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (153)

# தொண்டர்களுக்கான தாதிய பயிற்சி பூர்த்தி

(யாழ்ப்பாணம்)
யாழ். செஞ்சிலுவைச்சங்கத்தினரால் தெரிவு செய்யப்பட்ட 30 தொண்டர்களுக்கான ஒன்றரைமாத மாணவ தாதிய பயிற்சி நெறிவகுப்புகளை யாழ். போதனா வைத்தியசாலையில் முடித்துக்கொண்டு வெளியேறிய, சித்தியடைந்த 26 செஞ்சிலுவைச்சங்க தொண்டர்களுக்கு அண்மையில் நற்சான்றிதழ் பத்திரங்கள் வழங்கப்பட்டன.

யாழ். போதனா வைத்தியசாலை வெளிநோயாளர் மேல்மாடியில் இச்சான்றிதழ் வழங்கும் வைபவம் இடம்பெற்றது.

பணிப்பாளர் செல்வி புஸ்பா சண்முகம் தலைமையில் நடந்த இவ்வைபவத்தில் பிரதம அதிதியாக யாழ். மாவட்ட சர்வதேச செஞ்சிலுவைச்சங்க விசேட பிரதிநிதி பிரெட் கலந்துகொண்டுஇச்சான்றிதழ் பத்திரங்களை வழங்கி கௌரவித்தார்.

செஞ்சிலுவைச்சங்கத்தின் முன்னாள் தலைவர் டாக்டர் தெய்வேந்திரனும் கலந்துகொண்டார்.

## ஷெல் வீச்சு

(1-ம் பக்கத் தொடர்ச்சி)
இத்தாக்குதலின்போது வீட்டில் நின்ற ஒருவர் படுகாயமடைந்து யாழ் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

கே. தங்கன் (15 வயது) என்ற இளைஞனே காயமடைந்தவராவர். (56)

## நான்கு மாதங்களாக — வ.பி.போ.ச. ஊழியருக்கு சம்பளம் வழங்கப்படவில்லை

(யாழ்ப்பாணம்)
வடபிராந்திய போக்குவரத்துச்சபை ஊழியர்களுக்கு கடந்த நான்கு மாதங்களாக சம்பளம் வழங்கப்படவில்லை.

வடபிராந்திய போக்குவரத்துச்சபை ஏழு டிப்போக்களை உள்ளடக்கியுள்ளது. இவர்களுக்கு மாதாந்தம் சம்பளம் வழங்குவதற்கு 25 லட்சம் ரூபா தேவை என்றும் கடந்த வருடம் நவம்பர் மாதச்சம்பளமே இவர்களுக்கு கடைசியாக வழங்கப்பட்டுள்ளதென்றும் கூறப்படுகின்றது. (வி)

## பலாலி

(1ம் பக்கத் தொடர்ச்சி)
துறையிலிருந்து காரைநகரை நோக்கி ஷெல் தாக்குதல்களும் மேற்கொள்ளப்பட்டன. (7-)

## விமான

(1-ம் பக்கத் தொடர்ச்சி)
நேற்றுக்காலை 8-30 மணியளவில் இடம் பெற்ற இத்தாக்குதலில் விமானங்களிலிருந்து இரு குண்டுகள் வீசப்பட்டன.

இதேவேளை வவுனியா பாவற்குளம் இராணுவ முகாமிலிருந்து வெளியே வந்த இராணுவத்தினர் ஆறுமைல் தொலைவிலுள்ள சாலம்பன் குளத்தில் தங்கியுள்ளனர். (வி)

## கண்ணீர் அஞ்சலி

### சரவணமுத்து செல்வராசா

யாழ். இந்துக்கல்லூரியின் மூத்த பழைய மாணவர்களில் ஒருவரும் எமது சங்கத்தின் உபதலைவர்களில் ஒருவரும் கல்லூரியின் வளர்ச்சியில் அதிக அக்கறையுடன் ஈடுபட்டு வந்தவருமாகிய சரவணமுத்து செல்வராசா அவர்களின் மறைவிற்கு எங்கள் அஞ்சலி. துயரடைந்துள்ள உற்றார், உறவினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்கள்.

பழைய மாணவர் சங்கம்,
யாழ். இந்துக்கல்லூரி.
(எ-1205)

## வவுனியா

(1-ம் பக்கத்தொடர்ச்சி)
தோல்வியடைந்த அரசபடைகள் மீண்டும் இதற்கான முயற்சிகளில் ஈடுபட்டுள்ளனராம். (ரி)

## பொலிசார்

1-ம் பக்கத் தொடர்ச்சி)
நேற்று முன்தினம் பகல் 10-30 மணிக்கு நடைபெற்ற இம்மோதலில் 84 எஸ்-1, அதற்குரிய மகஸின்-1, றவைக் கூடுகள் 30 போன்ற ஆயுதங்களையும் புலிகள் கைப்பற்றினார்கள். (வி)

## காரைநகரில்

[1-ம் பக்கத் தொடர்ச்சி)
மேற்கொண்டன.

பராவெளிச்சங்கள் ஏவப்பட்டு தொடர்ச்சியாக இத்தாக்குதல் இடம்பெற்ற வண்ணமிருந்தது. கோவளம் வெளிச்ச வீட்டு முனையிலிருந்து இரு பீரங்கிக் கப்பல்கள் கடும் தாக்குதலை மேற்கொண்ட வண்ணமிருந்தன.

கடற்படை முகாமிலிருந்து அகோர ஷெல் தாக்குதலும் இடம்பெற்ற வண்ணமிருந்தது. முகாமையண்டிய பகுதியில் பாரிய வெளிச்சங்களுடன் குண்டு வெடிப்புச்சத்தங்களும் கேட்டவண்ணமிரு தன.

இச்செய்தி அச்சுக்குப் போகும் வரை முகாமிலிருந்தும். வானிலிருந்தும், கடலிலிருந்தும் படையினர் கடும் தாக்குதலைத் தொடர்ந்த வண்ணமிருந்தனர். (சி)

## 3-ம் ஆண்டு நினைவஞ்சலி



### திருமதி ருக்மணி செல்லையா

(உரிமையாளர்: அசோகா ஹாட்வெயர் ஸ்ரோர்ஸ்,
51, 53, மத்திய வீதி, திருகோணமலை)

அன்னையின் கையில்: 10-11-1936
ஆண்டவன் கையில்: 04-04-1988

திதி:
03-04-1991

எத்தனை கற்பனைகள் உள்ளத்தில் உதித்தனவோ
அத்தனையும் இன்று நிஜமாகும் வேளையிலே
உனை இழந்தோம் மனம் துடித்தோம்!
அளவில்லாக் கண்ணீரை விழிதனிலே நிறைத்துவிட்டு
அணையா ஜோதியென ஒளியேற்றிச் சென்றீரோ!
ஆண்டுகள் மூன்று உருண்டோடி போய்விட்ட
போதினிலும்
அன்பென்னும் அமுதினிலே நீராட்டி அறிவூட்டி
கொவ்வை இதழ்களால் கொட்டும் தேன்மொழியை
இனி எப்போ கேட்டிடுவோம் நாமெல்லாம்
இத்தரையில்
ஆண்டுகள் உருண்டோடி மறைந்தாலும் தாயே!
நீர் எமக்கு ஆறுதலைச் சொல்லிவைக்க வந்திடுவீர்!

உங்கள் ஆத்ம சாந்திக்காக
எந்நாளும் பிராத்திக்கின்றோம்.

கணவன், பிள்ளைகள், மருமக்கள்,
தாய், சகோதரங்கள்.

''அசோக் வாசம்'',
ஏழாலை மத்தி, ஏழாலை.
(சி-4608)

## காவலரணிலிருந்து

(1-ம் பக்கத் தொடர்ச்சி)
தாக்குதலை நடத்தினார்கள்.

இரு பகுதியினருக்குமிடையில் கடும்மோதல் இடம் பெற்றது.

இதேவேளை காரைநகர் இராணுவ முகாமிலிருந்து டிப்போ பகுதியை நோக்கி இராணுவ முகாமிலிருந்து இராணுவத்தினரால் கடுமையான ஷெல் தாக்குதல் நடத்தப்பட்டது.

இப்பகுதியில் இடம்பெற்ற மோதலின்போது விடுதலைப் புலிகள் இயக்கத்தைச் சேர்ந்த பொஸ்கோ [க. ஸ்ரீரஞ்சன் யாழ்ப்பாணம்), சேது [வீரசிங்கம் கிருபாகரன் வேலணை மேற்கு நாரந்தனை], நிதி [சித்தங்கேணி.] ஆகியோர் வீரமரணமடைந்தனர்.

இவர்களுக்கு புலிகள் தமது வீரவணக்கத்தை தெரிவித்துள்ளனர். (வி)

## ஆறு பொதுமக்கள்

[1-ம் பக்கத்தொடர்ச்சி]
ரால் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

கரடியனாறு இராணுவ முகாமிலிருந்து வெளியே வந்த இராணுவத்தினரை, வேப்பவெட்டுவானுக்கும் இலுப்பையடிச்சேனைக்கும் இடையில் வழிமறித்து விடுதலைப் புலிகள் கடும் தாக்குதல்களை நடத்தினார்கள். இத்தாக்குதலையடுத்தே பொதுமக்கள் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

பல மணி நேரம் இடம் பெற்ற இம்மோதலில், விடுதலைப் புலிகள் தரப்பில் இரு போராளிகள் வீர மரணம் அடைந்தனர்.

அமலன் (ம. ராஜேஷ்- மட்டக்களப்பு), குகநாதன் (இ. ரணசிங்கம்-அம்பாறை) ஆகிய போராளிகளே வீர மரணம் அடைந்தவர்களாவர்.

இவர்களுக்குப் புலிகள் தமது வீர வணக்கத்தைத் தெரிவித்துள்ளனர். (வி)

## 23 இராணுவ

(1-ம் பக்கத்தொடர்ச்சி)
சென்ற 'குமண' கப்பல், 3 மைல்களுக்கு அப்பால் கடலில் தரித்து நின்ற கடற்படையினரின் விசைப் படகில் ஒப்படைத்தனர்.

சடலங்களை ஏற்றிக்கொண்டு புறப்பட்ட விசைப்படகு, திருகோணமலையில் உள்ள சீனன்குடா துறைமுகத்தை நோக்கிச் செல்வதாகக் கடைசியாகக் கிடைத்த செய்திகள் தெரிவிக்கின்றன. (வி)

## நிவாரணப்

(1ம் பக்கத் தொடர்ச்சி)
கிக் கிடப்பதாகத் தெரியவருகிறது. மேலும் இதனை எடுத்துச செல்ல இராணுவத்தின் அனுமதி பெறவேண்டியிருப்பதாலும் தாமதம் ஏற்படுவதாகத் தெரியவருகிறது. (150)

## தினமும்

[1-ம் பக்கத் தொடர்ச்சி)
இப்பகுதியில் தொடர்ந்து இளைஞர்கள் கைது செய்யப்படுவதால் அப்பகுதி மாணவர்கள் கல்லூரிகளுக்கு ஒழுங்காக செல்ல முடியாதிருப்பதாக தெரிவிக்கப்படுகிறது. (150)

## கிளிநொச்சி

(1-ம் பக்கத்தொடர்ச்சி)
தப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டது.

நேற்றுமுன்தினம் முதல் வவுனியா, மன்னார் மாவட்டங்களில் அமுலான ஊரடங்குச் சட்டம் நகர்ப்பகுதிகளில் மட்டும் நீக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (பூ)


## சகாய விற்பனை

சுன்னாகம் இராமநாதன் கல்லூரியில்
முறைசாராக் கல்விப் பிரிவு கண்காட்சியில்
எதிர்வரும் 4-ம், 5-ம் தேதி வியாழக்கிழமை,
வெள்ளிக்கிழமை மில்க்வைற் சகாய விற்பனை.
அரைப்போத்தல் திரவ சவர்க்காரம் (Liquid Soap)
ஒலிவ் ஸ்நானப்பவுடர் பைக்கெற் ஒன்று,
கீரை விதை, கரிசலாங்கண்ணி பொலித்தீன் பை
ரூபா 50-00 மட்டுமே.
(ஏ 1204)


இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிடெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேற்கு வீதி, 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1991-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 3-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Post Office Sri Lanka under Licence Number: B/100306/81.